Free Digital Copy From ServeNow

# ஒரு கிறிஸ்தவராக வாழ நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

லார்ஸ் பி. டன்பெர்க்

ServeNow

Free Digital Copy From ServeNow

ஒரு கிறிஸ்தவராக வாழ நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அடிப்படை விஷயங்கள்

***The Basic Things You Need to Know About Being a Christian (Tamil)***

By Lars B. Dunberg

Copyright © 2017 by *ServeNow*.
Used by Permission. All rights reserved.

ISBN: 978-1-958730-73-7

All Bible Verses are taken from the Holy Bible (Tamil)
Copyright © 2019 by Bible Society of India

Published by *ServeNow*,
1817 Austin Bluffs Parkway, #110,
Colorado Springs, CO 80918.

Free Digital Copy From ServeNow

## *ஒரு கிறிஸ்தவர் என்றால் என்ன?*

பல ஆண்டுகளாக, உலகில் கிட்டத்தட்ட 100 நாடுகளுக்குச் செல்லும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. ஒரு கிறிஸ்தவனாக இருப்பதன் அர்த்தம் என்ன என்ற கேள்வி அவ்வப்போது என்னிடம் கேட்கப்பட்டது, மேலும் இதே கேள்வியைத்தான் நான் அடிக்கடி மக்களிடம் கேட்டிருக்கிறேன். அவர்களின்

பதில்கள் வெவ்வேறானதாக இருந்தது, பெரும்பாலான பதில் சத்தியத்தின் ஒருசில பகுதிகளை மட்டுமே சொல்கின்றன, ஆனால் அதன் முக்கிய அர்த்தம் கிடைக்கவில்லை.

நான் கேள்விப்பட்டதிலிருந்து சில உதாரணங்களை இங்கே தருகிறேன். பிறகு நாம் சத்தியத்தை அறிய முயற்சிப்போம்!

*கிறிஸ்தவர் என்றால் யார்? தெய்வ நம்பிக்கை உள்ள ஒருவர் கிறிஸ்தவர் என்று* நினைக்கிறேன்.

உலகெங்கிலும் உள்ள பலர் கடவுளை நம்புகிறார்கள். உதாரணமாக, இந்தியாவில் மக்கள் பல தெய்வங்களை நம்புகிறார்கள், ஆனால் அந்த நம்பிக்கை அவர்களை கிறிஸ்தவர்களாக ஆக்குவதில்லை.

*கிறிஸ்தவர் என்றால் யார்? ஜெபம் செய்யும் ஒருவர் கிறிஸ்தவர் என்று நான் நினைக்கிறேன்.* முகமதியர்கள் பிரார்த்தனை செய்கிறார்கள். இந்துக்கள் பிரார்த்தனை செய்கிறார்கள். பௌத்தர்கள் பிரார்த்தனை செய்கிறார்கள். கிறிஸ்தவர்களும் பிரார்த்தனை செய்கிறார்கள். ஆனால் பிரார்த்தனை செய்வது அவர்களை கிறிஸ்தவர்களாக ஆக்குவதில்லை.

கிறிஸ்தவர் *என்றால் யார்? தேவாலயத்திற்குச் செல்லும் ஒருவர் கிறிஸ்தவர் என்று நினைக்கிறேன்.*

சிலர் ஒரு சில பழக்கவழக்கத்தை விட்டுவிடலாம் அல்லது அவர்களது குடும்பத்தினரால் நெருக்கடி ஏற்படலாம். சிலர் எதிலும் ஆர்வமில்லாதவர்களாய் போய்விடுகிறார்கள். ஒருமுறை சில திருடர்கள் பணத்தைத் திருடுவதற்காக திருச்சபைக்குச் சென்றார்கள், ஆனால் திருச்சபைக்குச் செல்வது அவர்களை கிறிஸ்தவர்களாக மாற்றவில்லை.

*கிறிஸ்தவர்* என்றால் *என்ன? மற்றவர்களை விட சிறந்த வாழ்க்கையை வாழ்பவர் கிறிஸ்தவர் என்று நான் நினைக்கிறேன்.*

Free Digital Copy From ServeNow



மக்கள் தங்களை ஒரு கொலைகாரனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது பெரும்பாலும் அவர்கள் மிகவும் நல்லவர்கள் என்று நம்புகிறார்கள். மக்கள் தங்கள் சொந்த குடும்ப உறுப்பினர்களுடன் தங்களை ஒப்பிட்டுப் பார்க்கையிலும், அவர்கள் கிட்டத்தட்ட சற்று அதிகமாகவே நல்லவர்களாக இருக்கலாம். ஆனால் ஒரு கிறிஸ்தவனாக மாறுவதற்காக நல்லவனாக இருப்பதை விட, ஒரு டீஸ்பூனை மண்வெட்டியாகப் பயன்படுத்தி பெரிய மலை வழியாகச் சுரங்கம் தோண்டுவது எளிது!

*கிறிஸ்தவர் என்றால் என்ன? வேதாகமத்தை வாசிக்கும் ஒருவர்* கிறிஸ்தவர் *என்று நினைக்கிறேன்.* கிறிஸ்தவர்கள் வேதாகமத்தை நேசிக்கிறார்கள், அவர்களில் பலர் அதை தினமும் வாசிக்கிறார்கள். ஆனால் நாத்திகத்தின் தந்தைகளில் ஒருவரான கார்ல் மார்க்ஸ் தனது பதினைந்தாவது வயதில் வேதாகமப் புத்தகத்திற்கு ஒரு விளக்க புத்தகம் எழுதினார். அவர் வேதாகமத்தைப் படித்திருந்தாலும், தான் ஒரு கிறிஸ்தவர் என்று ஒருபோதும் அறிக்கையிட்டதில்லை. மக்கள் தங்களால் இயன்றவரை வேதாகமத்தைப் படிப்பது நல்லது, ஆனால் வேதாகமத்தைப் படிப்பது ஒருவரை கிறிஸ்தவராக மாற்றாது.

*கிறிஸ்தவர் என்றால் என்ன? மதச் சடங்காச்சாரங்களை நிறைவேற்றும் ஒருவர் கிறிஸ்வர் என்று நான் நினைக்கிறேன்.*

ஆதிகால திருச்சபையில் அப்போஸ்தலராக இருந்த பவுல், கிரேக்க நாட்டில் உள்ள அத்தேனே பட்டணத்துக்குச் சென்றபோது, அவர் குறிப்பிடத்தக்க ஒரு காரியத்தைக் கண்டார். அத்தேனே பட்டண மக்கள் பல மத விழாக்களில் பங்கேற்பதை அவர் கண்டறிந்தார். அப்போஸ்தல நடபடிகள் புத்தகம் 17:16-23 வரையுள்ள வசனங்களில் இதைப் பற்றி நீங்கள் படிக்கலாம்:

*“அத்தேனே பட்டணத்தில் பவுல் அவர்களுக்காகக் [சில நண்பர்களுக்காக]* காத்துக்கொண்டிருக்கையில், *அந்தப் பட்டணம் விக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் கண்டு, தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்து, ஜெப ஆலயத்தில் யூதரோடும், பக்தியுள்ளவர்களோடும், சந்தைவெளியில் எதிர்ப்பட்டவர்களோடும் தினந்தோறும் சம்பாஷணைபண்ணினான்.*

*அப்பொழுது எப்பிக்கூரரும் ஸ்தோயிக்கருமான ஞானிகளில் சிலர் அவனுடனே வாக்குவாதம் பண்ணினார்கள். சிலர்: இந்த வாயாடி என்ன பேசப்போகிறான் என்றார்கள். சிலர்: இவன் அந்நிய தேவதைகளை அறிவிக்கிறவனாகக் காண்கிறது என்றார்கள். அவன் இயேசுவையும் உயிர்த்தெழுதலையும் அவர்களுக்குப் பிரசங்கித்தபடியினாலே அப்படிச் சொன்னார்கள்.*

*அவர்கள் அவனை மார்ஸ் மேடைக்கு அழைத்துக்கொண்டுபோய்: நீ சொல்லுகிற புதிதான உபதேசம் இன்னதென்று நாங்கள் அறியலாமா? நூதனமான*

Free Digital Copy From ServeNow



*காரியங்களை எங்கள் காதுகள் கேட்கப்பண்ணுகிறாய்; அவைகளின் கருத்து இன்னதென்று அறியமனதாயிருக்கிறோம் என்றார்கள்.*

*(அந்த அத்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும், நவமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமேயொழிய வேறொன்றிலும் பொழுதுபோக்குகிறதில்லை.)*

*அப்பொழுது பவுல் மார்ஸ் மேடையின் நடுவிலே நின்று: "அத்தேனரே, எந்த விஷயத்திலும் நீங்கள் மிகுந்த தேவ பக்தியுள்ளவர்களென்று காண்கிறேன். எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாத தேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்று சொன்னான்."*

அத்தேனே பட்டணத்து மக்கள் ஒரு பலிபீடத்தின் மீது தங்களுக்குத் தெரியாத கடவுளுக்கு பலி செலுத்தினர். அவர்கள் மதத்தைப் பின்பற்றினர். ஆனால் மத சடங்குகளில் பங்கேற்பது அவர்களை கிறிஸ்தவர்களாக மாற்றவில்லை.

## *ஒரு கிறிஸ்தவராக மாறுவது என்பது இயேசு கிறிஸ்துவை அறிந்து கொள்வதிலிருந்து ஆரம்பிக்கிறது*

ஒரு கிறிஸ்தவர் என்றால் என்ன என்பதைப் பற்றிய உண்மையான புரிதலைப் பெற, தேவன் யார் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். முன்பு குறிப்பிடப்பட்ட அத்தேனே பட்டணத்து மக்களைப் பற்றி உங்களுக்கு நினைவிருக்கிறதா? அவர்கள் தேவன் யார் என்பதை அறிய விரும்பினர் மற்றும் "அறியப்படாத தேவனுக்கு" ஒரு பலிபீடத்தைக் கூட கட்டினார்கள். ஒருவேளை பவுல் அவர்களிடம், "அறியப்படாத தேவனிடத்தில் நீங்கள் எப்படி விண்ணப்பம்பண்ண முடியும் என்று கேட்டிருக்கலாம். ஒருவேளை அவர்கள் இவ்வாறு பதிலளித்திருக்கலாம்: "நாங்கள் இங்கே பலிபீடத்திலிருந்து பலிபீடம் பலிபீடமாகச் சென்றோம். நாங்கள் ஜெபம் செய்தோம், பலி செலுத்தினோம், ஆனால் எல்லா இடங்களிலும் மௌனம் மட்டுமே இருக்கிறது. யாரும் எங்களுக்குச் செவிகொடுக்கவில்லை என்பதுபோல் உணர்கிறோம். வெறும் மௌனம் மட்டுமே எங்களுக்குப் பதிலாகக் கிடைக்கிறது. ஆனால் நமக்கு உத்தரவு கொடுக்கும் தேவன் ஒருவர் நிச்சயம் இருக்க வேண்டும். அவர் எங்காவது இருப்பார். அதனால்தான் இந்தப் பலிபீடத்தைக் கட்டியுள்ளோம்."

அப்போஸ்தலனாகிய பவுல் அவர்களிடம் இவ்வாறு கூறினார்: *"உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவனானவர் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கிறபடியால் கைகளினால் கட்டப்பட்ட கோவில்களில் அவர் வாசம்பண்ணுகிறதில்லை. எல்லாருக்கும்*

Free Digital Copy From ServeNow



*ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர், தமக்கு யாதொன்று தேவையானதுபோல, மனுஷர் கைகளால் பணிவிடைகொள்ளுகிறதுமில்லை. மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்.*

*கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்."* (அப்போஸ்தலர் 17:24-28).

மற்றவர்கள் தேவனை நோக்கிப் பார்த்துத் தங்கள் வழியை உணர விரும்புகிறார்கள். அவர்கள் தேவனைப் பார்க்கவும் தேவனுடைய சத்தத்தைக் கேட்கவும் விரும்புகிறார்கள். நீங்கள் தேவனை அறிய விரும்பினால், 2,000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த நாசரேயனாகிய இயேசு என்று அழைக்கப்படும் ஒரு நபரைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும்.

இயேசு இங்கே பூமியில் இருந்தபோது,பலர் அவருடைய சீஷர்களாகவும் அவரைப் பின்பற்றுபவர்களாகவும் இருந்தனர். அவர்கள் அவருடன் கூட இருந்து, அவர் சொல்வதற்குச் செவிகொடுத்து, அவரிடமிருந்து அநேக காரியங்களைக் கற்றுக்கொண்டனர், அவருடைய கிரியைகளைப் பார்த்தார்கள், அவருக்கு துணையாய் இருந்து உதவினார்கள்.

இப்போதும் அப்படித்தான். நீங்கள் இயேசுவைப் பற்றி படிக்கும்போதும், இயேசுவிடம் ஜெபிக்கும்போதும்,இயேசுவை ஆராதிக்கும்போதும்,இயேசுவைப் பற்றிப் பேசும்போதும், இவை அனைத்தும் மிகவும் சாதாரணமானதாகவும் இயல்பானதாகவும் மாறும். இயேசுவைப் பின்பற்றுவது என்பதற்கும் அதிக அறிவாற்றலுடன், மற்றவர்களை விட அதிகமாக ஒழுக்கநெறிமுறைகளைக் கடைப்பிடித்து வாழ்வதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இயேசு சொன்னார், *"எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."* (மாற்கு 10:15). நீங்கள் எந்தளவுக்கு இயேசு கிறிஸ்துவை முழுமையாக விசுவாசிக்க ஆரம்பிக்கிறீர்களோ, அந்த அளவுக்கு அதிகமாக நீங்கள் அவரை அறிந்துகொள்வீர்கள். நீங்கள் சில நூதனமான தெய்வங்களை நம்பவில்லை என்றும், மாறாக மெய்யான தெய்வத்தையே நம்புகிறீர்கள் என்பதையும் நீங்கள் அறிந்துகொள்வீர்கள். நீங்கள் ஒரு புதிய சிருஷ்டியாய் இருக்கிறீர்கள். *இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின* (2 கொரிந்தியர் 5:17).

Free Digital Copy From ServeNow

பூமியில் இயேசு வாழ்ந்த நாட்களின் முடிவில், அவருடைய சீஷர்களில் ஒருவரான பிலிப்பு அவரிடம் இவ்வாறு கூறினார்: *"பிலிப்பு அவரை நோக்கி: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அது எங்களுக்குப் போதும் என்றான். அதற்கு இயேசு: பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா? என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்;"* (யோவான் 14:9).

சீஷர்கள் இயேசுவைப் பார்த்திருக்கிறார்கள், அதனால் அவர்கள் ஆண்டவரையும் பார்த்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். நீங்கள் தேவனைப் பார்க்க விரும்பினால், நீங்கள் தேவனை அறிய விரும்பினால், இயேசு யார் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதுவே கிறிஸ்தவனாக மாறுவதற்கான முதல் படியாகும்.

## *மனிதனின் பிரச்சினை*

மனிதர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் இயேசு கிறிஸ்து மூலமாகத் தீர்க்கப்படும். மனிதர்களைப் பற்றிய முதல் குறிப்பு வேதாகமத்தின் முதல் புத்தகத்தில் காணப்படுகிறது, தேவன் இவ்வாறு சொன்னார்: *"நமது சாயலாகவும் நமது* ரூபத்தின்படியேயும் *மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்."* (ஆதியாகமம் 1:26-27).

மக்கள் தேவனைக் கண்டுபிடிக்கவில்லை. தேவன்தான் உங்களைக் கண்டுபிடித்தார். நீங்கள் தேவனைப்போல சிருஷ்டிக்கப்பட்டுள்ளீர்கள். ஆனால் நமக்கு ஒரு காரியம் நடந்துவிட்டது. ஆதி முதலே, தேவன் சிருஷ்டித்தவர்களான முதல் இரண்டு மனிதர்களும் அவருக்குக் கீழ்ப்படியாமல் இருந்தார்கள், மேலும் தங்களைக் குறித்த தேவனுடைய சித்தத்தைத் தவறவிட்டார்கள். மேலும் சிருஷ்டிப்பின் வரலாற்றில் (ஆதியாகமம் 2) நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை புசிககாமல், அதைத் தவிர்க்கும்படி, தேவன் முதல் மனிதனான ஆதாமுக்குக் கட்டளையிட்டார் என்று வாசிக்கிறோம். அந்த மரத்தின் கனிகளைப் புசிக்க அவனுக்கு அனுமதி இல்லை. ஆதியாகமம் 3ஆம் அத்தியாயத்தில், ஆதாமும் முதல் ஸ்திரீயான ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல், அந்தக் கனியைப் புசித்தனர் என்று நாம் காண்கிறோம். வேதாகமத்தில் கீழ்ப்படியாமை என்பது ஒரு பாவம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் பாவத்தின் விளைவாக, ஆதாமும் ஏவாளும் தங்கள் வாழ்வில் அவமானத்தையும் பயத்தையும் உணர்ந்தனர். அவர்கள் அப்போதே மரணத்தை அனுபவிப்பார்கள் என்று தேவன் அவர்களுக்குச் சொல்லியிருந்தார்.

Free Digital Copy From ServeNow



அப்போஸ்தலனாகிய பவுல், ரோமாபுரியில் உள்ள திருச்சபையினருக்கு எழுதுகையில், *"இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று"* என்று எழுதி அந்த இக்கட்டான சூழ்நிலையை விளக்குகிறார் (ரோமர் 5:12).

இந்தப் பாவப் பிரச்சினைக்கு இயேசுதான் ஒரே தீர்வு. இயேசுவின் வாழ்க்கை ஏன் மிகவும் முக்கியமானது என்பதை அறிய தொடர்ந்து வாசியுங்கள்!

## *கிறிஸ்தவ விசுவாசத்தின் அஸ்திபாரம்*

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உலகம் முழுவதும் திருச்சபை வளரத் தொடங்கியபோது, கிறிஸ்தவத்தின் அடிப்படை *சத்தியங்கள்* என்ன என்று அநேகர் வியப்புடன் சிந்தித்தனர். இந்த அடிப்படை நம்பிக்கைகளின் தொகுப்பை அவர்கள் சுவிசேஷம் அல்லது நற்செய்தி என்று அழைத்தனர். ஆகவே, இயேசுவை வியத்தகு முறையில் சந்தித்த பவுல், ஆரம்பகால திருச்சபைகளில் ஒன்றிற்கு இவ்வாறு சித்தரித்துக் காட்டினார்:

*"அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்; நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்; மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவாயிருக்குமே.*

*நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், (இயேசு) கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து,"* (1 கொரிந்தியர் 15:1-4).

இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்து, மரித்தோரிலிருந்து *உயிர்த்தெழுப்பப்பட்டதால்*, பாவ பிரச்சனையிலிருந்து நம்மை இரட்சிக்கும்படி இயேசுவிடம் இப்போது கேட்கலாம். அது நமக்கான நல்ல செய்தியாகும்.

## *இயேசு கிறிஸ்து உங்களுக்குப் புதிய(மறு) பிறப்பை அறிமுகப்படுத்துகிறார்*

நற்செய்தி மற்றும் "மறுபடியும் பிறத்தல்" என்பதன் அர்த்தம் என்ன என்பதைப் பற்றி மேலும் அதிகமாக விளக்க, வேதாகமம் நிக்கொதேமுவைப் பற்றிய கதையைச் சொல்கிறது, ஒரு புதிய வாழ்க்கை என்று ஏதாவது

Free Digital Copy From ServeNow

இருக்கிறதா என்பதைக் கண்டறிய ஒரு நாள் இரவு நேரத்தில் நிக்கொதேமு இயேசுவைச் சந்தித்தார். அந்த சம்பவத்தை வாசிப்போம்:

*"யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான்.*

*இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

*அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான்.*

*இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்திலே பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக்குறித்து அதிசயப்படவேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். அதற்கு நிக்கொதேமு:*

### *இவைகள் எப்படி ஆகும் என்றான்.*

*இயேசு அவனை நோக்கி: நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கிறாயா? மெய்யாகவே மெய்யாகவே நான் உனக்குச் சொல்லுகிறேன், நாங்கள் அறிந்திருக்கிறதைச் சொல்லி, நாங்கள் கண்டதைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறோம்; நீங்களோ எங்கள் சாட்சியை ஏற்றுகொள்ளுவதில்லை. பூமிக்கடுத்த காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லியும் நீங்கள் விசுவாசிக்கவில்லையே, பரமகாரியங்களை உங்களுக்குச் சொல்வேனானால் எப்படி விசுவாசிப்பீர்கள்? பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை. சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன்*

Free Digital Copy From ServeNow



*கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும். தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்."* (யோவான் 3:1-17).

நிக்கொதேமு ஒரு நல்ல நபராகவும், மதப்பற்று உடையவராகவும் மற்றும் கனம்பெற்ற நபராகவும் இருந்தார். ஒருவேளை அவர் மத நியாயசங்கத்தின் உறுப்பினராக இருந்திருக்கலாம். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக, அவர் கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய சிருஷ்டியாக மாற விரும்பினார்.

நிக்கெதேமுவுக்கு ஒரு புதிய பிறந்தநாள் தேவைப்பட்டது! அவர் மீண்டும் பிறக்க வேண்டும் என்பதை அறிந்துகொண்டார். நீங்கள் உங்கள் பெற்றோர் மூலம் பிறந்தது போல் அவர் சரீரப் பிரகாரமாகப் பிறந்திருந்தார். ஆனால் நிக்கொதேமு ஆவிக்குரிய பிரகாரமாகவும் பிறக்க வேண்டியிருந்தது. அது சற்று சிக்கலானதாகத் தெரிகிறது, ஆனால் அது எப்படி நடக்கும் என்பதை இயேசு சுட்டிக்காட்டினார்.

இயேசுவின் சீஷர்களில் ஒருவர் இவ்வாறு எழுதினார்: *"அவருடைய [இயேசுவின்] நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்."* (யோவான் 1:12-13).

**கிறிஸ்தவர் என்றால் யார்?** *தன் வாழ்வின் பாவ பிரச்சனைகளுக்கு இயேசு தீர்வாக இருப்பார் என்று விசுவாசித்து, மறுபடியும் பிறக்கும்படி ஆண்டவரிடம் கேட்பவரே ஒரு ஒரு கிறிஸ்தவர் ஆவார்.*

## *ஒரு கிறிஸ்தவர் தேவனுடைய குடும்ப உறுப்பினர்*

அந்தியோகியா பட்டணத்தில் வாழ்ந்த விசுவாசிகள்தான் முதன்முதலில் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர். அந்தியோகியா ஒரு பெரிய பட்டணமாக இருந்தது, அங்கு சுமார் 300,000 மக்கள் வாழ்ந்திருக்கலாம். இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிய ஒரு சிறிய குழுவினர் கிறிஸ்தவர்கள் என்று அறியப்பட்டனர், ஏனென்றால் அவர்கள் வேறுபட்ட வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழ்ந்தனர்.

மிகவும் வேறுபட்ட வாழ்க்கையை வாழ எது அவர்களுக்குக் காரணமாய்

Free Digital Copy From ServeNow

அமைந்தது? தேவனுடைய கிருபைதான் அவர்களை கடந்த கால வாழ்க்கையிலிருந்து இயேசு கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய வாழ்க்கைக்கு அழைத்துச் சென்றது. இயேசு சிலுவையில் மரித்ததாலும், மூன்று நாட்களுக்குப் பிறகு அவர் சரீரத்தோடு உயிர்த்தெழுந்ததாலும் மட்டுமே தேவனுடைய கிருபை எல்லோருக்கும் கிடைப்பது சாத்தியமாகிறது. இரட்சிப்பை பணத்தால் சம்பாதிக்க முடியாது. இது விசுவாசத்தால் கிடைக்கும் இலவச பரிசாகும்.

## *ஒரு கிறிஸ்தவர் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்*

இயேசுவின் நாட்களில், ஒரு சீஷர் தனது போதகரின் பேச்சைக் கேட்டு நடந்தது மட்டுமல்லாமல், ஒவ்வொரு நாளும் அவரை உண்மையில் பின்பற்றுபவராக இருந்தார்.

இன்று நாம் இயேசுவின் வார்த்தையை விசுவாசிப்பதன் மூலமும் ஜெபத்தின் மூலமுமும் அவருக்கு செவிசாய்க்கிறோம், மேலும் அவரைப்போல நாம் வாழ்ந்துகாட்டுவதன் மூலம் அவரைப் பின்பற்றுகிறோம்.

## *ஒரு கிறிஸ்தவர் பரிசுத்த ஆவியானவர் தங்கும் தேவாலயம்*

கிறிஸ்தவர்களை பரிசுத்த ஆவியானவர் தங்கும் ஆலயம் என்று வேதாகமம் விவரிக்கிறது. தேவன் யூத மக்களிடம் தாம் வசிப்பதற்காக ஒரு ஆலயத்தைக் கட்டச் சொன்னதுபோல, கிறிஸ்தவர்களாகிய நாமும் அவருடைய ஆவியால் நிரப்பப்பட வேண்டும் - அவருடைய ஆவியை நம் இதயங்களிலும் மனதிலும் வாசம் செய்ய அனுமதித்து, தேவனை மகிமைப்படுத்த நமது அனைத்து திறமைகளையும் பெலன்களையும் அர்ப்பணிக்க வேண்டும்.

## *ஒரு கிறிஸ்தவர் பரலோகத்தை எதிர்நோக்கி வாழ்பவர்*

நாம் இப்பூமியில் வாழும் நாட்களில் மட்டும் கிறிஸ்தவர்களாக வாழ்வதில்லை. நாம் நித்திய நித்தியமாக தேவனுக்குச் சொந்தமானவர்கள், மேலும் நமது புதிய வாழ்க்கையை பரலோகத்தில் மறுரூபமான சரீரத்துடன் வாழ எதிர்நோக்குகிறோம்.

## *ஒரு கிறிஸ்தவர் வேதாகமத்தை தவறாமல் வாசிப்பவர்*

நீங்கள் உலகில் எங்கு சென்றாலும், கிறிஸ்தவர்கள் வேதாகமத்தை வாசிப்பவர்களாகவும் ஆராய்ந்து படிக்கும் மக்களாகவும் இருக்கின்றனர். ஏன்?

Free Digital Copy From ServeNow



## *வேதாகமம் இயேசுவை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது*

வேதாகமத்தை வாசிப்பது என்பது ஒரு பெரிய மந்திரம் இல்லை. ஆனால் எழுதப்பட்ட வார்த்தை (வேதாகமம்) ஜீவனுள்ள வார்த்தையை (இயேசு) நமக்குச் சுட்டிக்காட்டி, "இயேசுவிடம் செல்" என்று கூறுகிறது. நாம் இயேசுவிடம் செல்லவில்லையென்றால், வேதாகமத்தை வாசிப்பதன் முழு அர்த்தத்தையும் இழந்துவிடுவோம்.

## *நாம் தேவனோடு வாழ்வதற்கான ஆதாரமே வேதாகமம்*

கிறிஸ்தவர்கள் நடக்க வேண்டிய பாதையில் பிரகாசிக்கும் விளக்கு போன்றதுதான் வேதாகமம். தேவன், இயேசு மற்றும் பரிசுத்த ஆவியானவரைப் பற்றி கிறிஸ்தவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அனைத்து காரியங்களும் வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளன. வேதாகமம் புரிந்துகொள்வதற்கான ஆதாரமாக இருக்கிறது - தேவனுடனான உங்கள் உறவுக்கான ஆதாரமாகவும் இருக்கிறது. அது உங்கள் மனசாட்சியை வழிநடத்துகிறது.

## *சாத்தானுடன் போரிடுவதற்கு வேதாகமம் உங்களை பெலப்படுத்துகிறது*

இயேசு வனாந்தரத்தில் சாத்தானால் சோதிக்கப்பட்டபோது,அவர் வேதாகமத்திலிருந்து வார்த்தைகளை எடுத்து மேற்கோள் காட்டி பதிலளித்தார். நாம் தேவனுடைய வார்த்தையை அறிந்துவைத்திருக்கும்போது, அது ஆவிக்குரிய வல்லமைக்கான ஆயுதமாக மாறுகிறது. வேதாகமம் ஒரு பட்டயத்தைப் போன்றது, அது சோதனையை எதிர்த்துப் போராட நமக்கு உதவுகிறது. வேதாகமம் ஊழியம் செய்ய நமக்கு உற்சாகமளிக்கிறது, உங்களைச் சுற்றியுள்ளவர்களை இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களாக மாறுவதற்கு சவால்விடுவதன் மூலம், ஒரு கிறிஸ்தவராக நீங்கள் உலகிற்கு ஊழியம் செய்ய அழைக்கப்படுகிறீர்கள். சரீரப்பிரகாரமாகவும் மனதளவிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கும், தேவையில் உள்ளவர்களுக்கும் இரக்கம் காட்டுவது ஊழியம் செய்வதில் உள்ளடங்கும்.

எல்லா வேதவாக்கியங்களும் தேவனால் ஏவப்பட்டவை, உண்மையை நமக்கு போதிக்கவும், நம் வாழ்வில் உள்ள தவறுகளை நமக்கு உணர்த்தவும் அவை பயனுள்ளதாக இருக்கும். நாம் தவறு செய்யும்போது அது நம்மைத் திருத்துகிறது மற்றும் சரியானதைச் செய்யக் கற்றுக்கொடுக்கிறது (2 தீமோத்தேயு 3:16).

Free Digital Copy From ServeNow



## *வேதாகமம் புரிந்துகொள்ளுதலைப் பெருகச்செய்கிறது*

வேதாகமம் கிறிஸ்தவர்களுக்கு உணவு போன்றது, அதே நேரத்தில் அது சற்று வேறுபட்டது. சரீரப்பிரகாரமாக எவ்வளவு அதிகமாக உணவு உண்ணுகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக உங்கள் பசி ஆற்றப்பட்டு திருப்தியடைவீர்கள். ஆனால், நீங்கள் எவ்வளவு அதிகமாக ஆவிக்குரிய உணவை உண்ணுகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் தேவன் மீது பசிதாகமுள்ளவர்களாய் இருப்பீர்கள். வேதாகமம் தேவனைப் பற்றிய உங்கள் புரிதலை வளரச்செய்கிறது, அவரைப் பற்றி அதிகம் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பத்தை உருவாக்குகிறது, மேலும் அவரிடம் கிட்டிச்சேர உங்களுக்கு உதவுகிறது.

## *ஒரு கிறிஸ்தவனுக்கு தேவனோடு உறவு இருக்கும்*

## *கிறிஸ்தவர் தேவனுடன் தொடர்புகொள்பவர்*

ஜெபம் என்பது தனிநபரை மையமாகக் கொண்ட ஒரு ஒழுக்கமுறை அல்ல. நீங்கள் ஒரு கிறிஸ்தவராக இருந்து ஜெபிக்கும்போது, நாம் தேவன் மீது மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். அர்த்தமற்ற வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும் என்றும், தேவனை தங்கள் பரலோகத் தகப்பனாக நினைத்து பேச வேண்டும் என்றும் இயேசு தம் சிநேகிதர்களுக்குப் போதித்தார். ஜெபம் என்பது தேவனுடனான உறவை உள்ளடக்கியது. இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றி நாம் அதைக் கற்றுக்கொள்ள வேண்டும். அவர் தனியாகச் சென்று, தமது பிதாவோடு ஜெபத்தில் தனிமையில் நேரத்தை தவறாமல் செலவிட்டார்.

## *ஒரு கிறிஸ்தவர் ஜெபத்தின் மூலம் ஆண்டவரில் வளர்ச்சியடைபவர்*

ஜெபம் நமது சுவாசம் போன்றது; அது கிறிஸ்தவர்களின் வாழ்க்கையாக இருக்க வேண்டும். நாம் தவறாமல் ஜெபிக்கும்போது,நம் குணத்திலும் உள்ளார்ந்த மனதிலும் தொடர்ந்து வளர்கிறோம். ஜெபம் பலவீனத்தின் அடையாளம் அல்ல, வலிமை மற்றும் முன்னேற்றத்துக்கான அடையாளமாகும். ஜெபம் என்பது கல்வி போன்றது. சீஷர்கள் இயேசுவால் போதிக்கப்பட வேண்டியிருந்தது, மேலும் ஜெபத்திற்கான ஒரு மாதிரியை அவர் அவர்களுக்குக் கொடுத்தார். திருச்சபை ஒருபோதும் அதை மறக்கவில்லை. கிறிஸ்தவர்கள் தேவனுக்குள் வளரும்படி, ஒவ்வொரு வயதினரும் அதே பாடங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் சிலாக்கியங்களை எதிர்கொள்கின்றனர்.

Free Digital Copy From ServeNow

## *ஒரு கிறிஸ்தவர் ஜெபத்தின் மூலம் தேவனைத் துதிப்பவர்*

நாம் பரிசுத்த ஆவியானவர் தங்கும் ஆலயமாக இருப்பதால் எல்லாவற்றிலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும். புதிய ஏற்பாட்டின்படி, நன்றி செலுத்துதல், மகிழ்ச்சி மற்றும் துதி ஆகியவை கிறிஸ்தவ குணநலன்களின் முக்கிய அம்சங்களாகும். சங்கீத புத்தகம், தேவனுடைய மகத்துவத்தைப் பற்றியும், அவர் தம்முடைய மக்களுக்கு என்ன செய்திருக்கிறார் என்பதைப் பற்றியும் மீண்டும் மீண்டும் நமக்குக் கற்பிக்கிறது. தேவனுடைய நீதியுள்ள மனநிலை மற்றும் அவரது தயவு போன்ற சிறந்த குணாதிசயங்களை நாம் தியானிக்கும்போது, துதித்தல் ஜெபத்தின் முக்கிய அங்கமாகிறது.

## *ஒரு கிறிஸ்தவர் ஜெபத்தின் மூலம் தேவனுக்கு நன்றி செலுத்துபவர்*

*"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே* எப்பொழுதும் *எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து,"* (எபேசியர் 5:20). நம்மில் பலர், சில நேரங்களில் சில விஷயங்களுக்கு நன்றி செலுத்துகிறோம். ஆவியால் நிரப்பப்பட்ட விசுவாசிகள் எல்லாவற்றிற்கும் எப்போதும் நன்றி செலுத்துகிறார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அவர்கள் அப்படிச் செய்கிறார்கள்.

## *ஒரு கிறிஸ்தவர் ஜெபத்தின் மூலம் தேவ சித்தத்தை புரிந்துகொள்பவர்*

ஜெபம் என்பது நம் விருப்பத்தை தேவன் மீது திணிப்பதற்கான ஒரு வழி அல்ல; மாறாக, அது நமக்கான அவருடைய சித்தத்தை *அறிந்துகொள்வதாகும்*. ஜெபத்தின் மூலம் நாம் தேவனுடைய சித்தத்தைத் நாடுகிறோம். நாம் அவருடைய சித்தத்தை ஏற்றுக்கொண்டு அதனுடன் நம்மை இணைத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு உண்மையான ஜெபமும் "உம்முடைய சித்தம் செய்யப்படுவதாக" என்ற கருப்பொருளின் அர்த்தத்தை உடையதாகும்.

நமது எஜமானர் நமக்குக் கற்றுக்கொடுத்திருக்கும் மாதிரி ஜெபங்களில் அவர் இதைக் கற்பித்திருக்கிறார். சிலுவையில் அறையப்படுவதற்கு சற்று முன்பு, தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படிந்ததற்கான மிக உயர்ந்த உதாரணத்தை இயேசு நமக்கு வழங்கினார். அவர் கெத்செமனே தோட்டத்தில் இருந்தபோது, *"என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது"* என்று ஜெபம்பண்ணினார். (மத்தேயு 26:39).

Free Digital Copy From ServeNow

## *ஒரு கிறிஸ்தவர் ஜெபத்தின் மூலம் ஒரு புதிய பரிமாணத்திற்குள் பிரவேசிப்பவர்*

தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் ஜெபம், கிறிஸ்தவரை ஒரு புதிய பரிமாணத்திற்கு நேராக வழிநடத்துகிறது. எபேசியர் 6:18ல் அதைக் காண்கிறோம். எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனவுறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும்பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருக்க வேண்டும், ஏனெனில் நல்ல போர் சேவகர்களைப்போல நாம் விழித்திருக்க வேண்டும், தேவனுடைய மக்களின் ஐக்கியம் நம் ஜெபங்களில் பிரதிபலிக்கப்பட வேண்டும் என்பதால், கைவிட்டுவிடாமலும், உறங்கிவிடாமலும் கர்த்தருடைய மக்கள் அனைவருக்காகவும் எப்போதும் ஜெபித்துக்கொண்டே இருக்க வேண்டும். பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சில சமயங்களில், சில ஜெபங்கள் மற்றும் ஓரளவு விடாமுயற்சியுடன், தேவனுடைய மக்கள் ஒருசிலருக்காக ஜெபிக்கிறார்கள். ஆனால் இந்த வெளிப்பாடுகள் ஒவ்வொன்றிலும் சிலருக்காக என்ற பதத்தை பலருக்காக என்று மாற்றுவது ஜெபத்தின் புதிய பரிமாணத்தை நமக்கு அறிமுகப்படுத்துவதாகும்.

## *கிறிஸ்துவைப் பற்றி மற்றவர்களிடம் சொல்வதன் மூலம்*

## *ஒரு கிறிஸ்தவர் தனது விசுவாசத்தைப் பகிர்ந்துகொள்பவர்.*

கிறிஸ்தவம் ஒரு தத்துவத்தையோ அல்லது மத அமைப்பையோ குறிப்பதாக இல்லாமல் இயேசு கிறிஸ்து எனும் நபரைப் பற்றி பேசுவதால், ஆரம்பகால சீஷர்கள் அவரைப் பற்றிய செய்திகளைப் பகிர்ந்துகொள்வதை கடினமாக உணரவில்லை. சில சீஷர்கள் சாதாரண வியாபாரிகளாகவும், மற்றவர்கள் கற்றறிந்த அறிஞர்களாகவும், பலர் பெண்களாகவும் இருந்தனர், அவர்கள் அனைவருமே ஒருவரை மாற்றவல்ல இயேசுவின் வல்லமையை அனுபவித்திருந்தனர். அதனால்தான் இயேசுவை மற்றவர்களுக்கு அறிவிப்பது அவர்களுக்கு எளிதாக இருந்தது. அப்போஸ்தலனாகிய பிலிப்பு காசாவிலுள்ள பாலைவனப் பாதையில் பயணித்தபோது,எத்தியோப்பிய அதிகாரியிடம் இயேசுவைப் பற்றிப் பகிர்ந்துகொண்டார். அப்போஸ்தலர் 8:26-40 வரையுள்ள வசனங்களில் பிலிப்பைப் பற்றி நீங்கள் வாசிக்கலாம். நாம் சந்திக்கும் அனைத்து நபர்களுடனும் இவ்வாறே இயேசுவைப் பற்றிப் பகிர்ந்துகொள்ள வேண்டும். நாம் அனைவரும் இயேசுவுக்குச் சாட்சிகளாக இருக்க வேண்டும்.

## *… சத்தியத்தை விளக்க முன்வருவதன் மூலம்*

*"இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்."* (யோவான் 14:6).

Free Digital Copy From ServeNow

ஒரு வழியைத் தேடி நீங்கள் கிறிஸ்துவிடம் வரும்போது, அது ஒரு புதிய வாழ்க்கையைக் கண்டுபிடிப்பது போன்ற ஒரு சிறந்த அனுபவமாக இருக்கலாம். பிறகு, நீங்கள் இயேசுவைப் பின்தொடரும்போது, அவரைப் பற்றி உங்களால் முடிந்த அளவுக்கு ஒவ்வொரு சத்தியத்தையும் கற்றுக்கொள்ள வேண்டும், அதன் மூலம் அந்த சத்தியங்களை நீங்கள் மற்றவர்களுக்கு விளக்கலாம். *"நீங்கள் பேசவேண்டியவைகளைப் பரிசுத்த ஆவியானவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதிப்பார்"* என்று இயேசு தம்முடைய சீஷர்களிடம் சொன்னார். (லூக்கா 12:12).

## *… அவரது அன்பைப் பகிர்ந்துகொள்வதன் மூலம்*

கிறிஸ்து நம்மை அழைத்து இந்த உலகத்திற்குள் அனுப்பும்போது,அவரைப் பற்றி பேசுவது மட்டுமல்லாமல், நாம் அதிகமாக மற்றவர்கள் மீது அன்புகூர வேண்டும் என்று அவர் விரும்புகிறார். நம்மை மாற்றிய தேவனுடைய அன்பை நாம் வெளிப்படுத்த வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இயேசு சிலுவையில் அறையப்படும்படி, கைது செய்யப்பட்டதற்கு முன்பு, அவர் தம்மைப் பின்பற்றுபவர்களிடம் இவ்வாறு கூறினார்: *"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன்."* (யோவான் 13:34).

## *… உங்களுக்கு நடந்த சம்பவங்களைப் பகிர்வதன் மூலம்*

கிறிஸ்துவைப் பற்றி நாம் பேச வேண்டும் என்பது நம்மைக் கட்டாயப்படுத்தும் ஒரு விஷயம் அல்ல. அவர் நமக்காகச் செய்தவற்றிற்கு பலனாக நாம் செய்ய விரும்புவதாகும். உங்கள் சொந்த வாழ்க்கை சம்பவத்தைச் சொல்லுங்கள் – கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு நீங்கள் எப்படி இருந்தீர்கள், அவர் உங்களை எப்படி மாற்றினார் என்று சொல்லுங்கள். இயேசுவைச் சந்தித்து அவரால் குணமடைந்த ஒரு குருடன் இவ்வாறு சொன்னான்: *"நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது காண்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்."* (யோவான் 9:25).

# *ஒரு கிறிஸ்தவரும் உலகமும்*

## *ஒரு கிறிஸ்தவர் உலகத்திலிருந்து வெளியே வரும்படி அழைக்கப்படுகிறார்.*

ஒரு கிறிஸ்தவர் உலகத்தால் சூழப்பட்டிருக்கிறார் என்றாலும், நாம் உலகத்திலிருந்து வெளியே வரும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். கிறிஸ்தவ மக்கள் உலக மக்களைப்போல சிந்திக்கவோ நடந்துகொள்ளவோ கூடாது, மாறாக கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் சிந்தையைத் தரித்தவர்களாய் இந்த

Free Digital Copy From ServeNow

உலகில் வாழ வேண்டும். சில சமயங்களில் அதை பரிசுத்தம் என்று நாம் அழைக்கிறோம். அதாவது மற்றவர்களைப்போலல்லாமல் ஒரு வேறுபட்ட வாழ்க்கையை வாழ்வது என்பது இதன் அர்த்தமாகும். பரிசுத்தமான ஒரு நபர் ஒரு வித்தியாசமான நபராக இருப்பார். ரோமாபுரியில் இருந்த முதல் கிறிஸ்தவர்களுக்கு பவுல் கடிதம் எழுதி அவர்களை இவ்வாறு உற்சாகப்படுத்தினார்:

*"அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ளஆராதனை. நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்."* (ரோமர் 12:1-2).

## *ஒரு கிறிஸ்தவர் உலகிற்குள் அனுப்பப்படுகிறார்*

ஒரு கிறிஸ்தவன் தன்னை உலகத்தால் கறைபடுத்திக்கொள்ளக்கூடாது, அதேவேளையில் அவளோ அல்லது அவனோ உலகத்திலிருந்து தன்னை மறைத்துக்கொள்ளவும் கூடாது. அதற்குப் பதிலாக, உலகிற்கு ஒளியாகவும் உப்பாகவும் இருக்க, தூய்மையான மற்றும் நேர்மறையான வாழ்க்கையை வாழ தங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும்.

## *ஒரு கிறிஸ்தவன் உலகத்தை ஜெயிப்பவன்*

இது மிகப்பெரிய அளவிலான ஒரு யுத்தம். இந்த உலகத்தின் பொல்லாத கிரியைகள் நம்மை வலையில் சிக்க வைக்கும்படி, கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கு முன்பு நாம் வாழ்ந்த வாழ்க்கைக்கு நேராக நம்மை மீண்டும் பின்னோக்கி இழுத்துச் செல்ல முயல்கின்றன.

அப்போஸ்தலனாகிய யோவான் தனது நிருபம் ஒன்றில் இவ்வாறு எழுதியிருக்கிறார் : *"உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்;* ஒருவன் *உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்."* (1 யோவான் 2:15-17).

Free Digital Copy From ServeNow

## *கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றி இயேசு நமக்கு என்ன போதிக்கிறார்*

மத்தேயு புத்தகத்தில் 5-7 வரையுள்ள அதிகாரங்களில், வாழ்க்கையைப் பற்றி இயேசு நமக்கு நிறைய கற்றுக்கொடுத்திருக்கிறார்: *அவர் திரளான ஜனங்களைக் கண்டு மலையின்மேல் ஏறினார்; அவர் உட்கார்ந்தபொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள். அப்பொழுது அவர் தமது வாயைத் திறந்து அவர்களுக்கு உபதேசித்துச் சொன்னது என்னவென்றால்:* (மத்தேயு 5:1-2).

நாம் பொதுவாக இயேசுவின் இந்த போதனைகளை மலைப்பிரசங்கம் என்று அழைக்கிறோம்.

*ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம்* அவர்களுடையது.

*துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள்.*

*சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கிவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.*

*நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.*

*இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம்பெறுவார்கள்.*

*இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.*

*சமாதானம்பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்.*

*நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது.*

*என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு, களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே.* (மத்தேயு 5:3-12).

Free Digital Copy From ServeNow

நாம் *உப்பாகவும்* ஒளியாகவும் இருக்க வேண்டும் என்று இயேசு தொடர்ந்து கற்பித்தார்:

*நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்; உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள்; அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.* (மத்தேயு 5:13-16).

## *நியாயப்பிரமாணத்தைப் பற்றிய இயேசுவின் போதனை*

*நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், நியாயப்பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும், அதில் ஒரு சிறு எழுத்தாகிலும், ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்துபோகாது என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகையால், இந்தக் கற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன் பரலோகராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்; இவைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ, பரலோகராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்.*

*வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.* (மத்தேயு 5:17-20).

## *கோபத்தைக்* ***கையாள்வதைப் பற்றிய இயேசுவின் போதனை***

*கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்.*

Free Digital Copy From ServeNow



*ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து,*

*எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே நல்மனம்பொருந்து. பொருந்தாவிட்டால், நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.* (மத்தேயு 5:21-26).

## *விபச்சாரம் செய்யக் கூடாது என்பது பற்றிய இயேசுவின் போதனை*

*விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடுபார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று. உன் வலதுகண் உனக்கு இடறலுண்டாக்கினால், அதைப் பிடுங்கி எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்.*

*உன் வலதுகை உனக்கு இடறலுண்டாக்கினால், அதைத் தறித்து எறிந்துபோடு; உன் சரீரம் முழுவதும் நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும். உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போவது உனக்கு நலமாயிருக்கும்.* (மத்தேயு 5:27-30).

## *விவாகரத்து பற்றிய இயேசுவின் போதனை*

*தன் மனைவியைத் தள்ளிவிடுகிற எவனும், தள்ளுதற்சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவன் என்று உரைக்கப்பட்டது. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான்; அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான்.* (மத்தேயு 5:31-32).

Free Digital Copy From ServeNow

## பிரமாணங்களைப் பற்றிய இயேசுவின் போதனை

*அன்றியும், பொய்யாணையிடாமல், உன் ஆணைகளைக் கர்த்தர் முன்னிலையாய்ச் செலுத்துவாயாக என்று பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; பரிச்சேதம் சத்தியம்பண்ணவேண்டாம்; வானத்தின்பேரில் சத்தியம்பண்ணவேண்டாம், அது தேவனுடைய சிங்காசனம். பூமியின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம், அது அவருடைய பாதபடி; எருசலேமின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம், அது மகாராஜாவினுடைய நகரம். உன் சிரசின்பேரிலும் சத்தியம்பண்ணவேண்டாம், அதின் ஒரு மயிரையாவது வெண்மையாக்கவும் கறுப்பாக்கவும் உன்னால் கூடாதே. உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லுங்கள்; இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்.* (மத்தேயு 5:33-37).

## பழிவாங்குதலைப் பற்றிய இயேசுவின் போதனை

*கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல் என்று, உரைக்கப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தீமையோடு எதிர்த்து நிற்கவேண்டாம்; ஒருவன் உன்னை வலது கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறு கன்னத்தையும் திருப்பிக்கொடு. உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு மைல் தூரம் வரப் பலவந்தம்பண்ணினால், அவனோடு இரண்டு மைல் தூரம் போ. உன்னிடத்தில் கேட்கிறவனுக்குக் கொடு, உன்னிடத்தில் கடன்வாங்க விரும்புகிறவனுக்கு முகங்கோணாதே.* (மத்தேயு 5:38-42).

## சததுருக்களை நேசிப்பதைப் பற்றிய இயேசுவின் போதனை

*உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகிப்பீர்களானால், உங்களுக்குப் பலன் என்ன? ஆயக்காரரும் அப்படியே செய்கிறார்கள் அல்லவா? உங்கள் சகோதரரைமாத்திரம் வாழ்த்துவீர்களானால், நீங்கள் விசேஷித்துச் செய்கிறது என்ன? ஆயக்காரரும்*

Free Digital Copy From ServeNow



*அப்படியே செய்கிறார்கள் அல்லவா? ஆகையால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக்கடவீர்கள்.* (மத்தேயு 5:43-48).

## *ஏழைகளுக்கு கொடுப்பது பற்றிய இயேசுவின் போதனை*

*மனுஷர் காணவேண்டுமென்று அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; செய்தால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை. ஆகையால் நீ தர்மஞ்செய்யும்போது, மனுஷரால் புகழப்படுவதற்கு, மாயக்காரர் ஆலயங்களிலும் வீதிகளிலும் செய்வதுபோல, உனக்கு முன்பாகத் தாரை ஊதுவியாதே; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ தர்மஞ்செய்யும்போது, உன் தர்மம் அந்தரங்கமாயிருப்பதற்கு, உன் வலதுகை செய்கிறதை உன் இடதுகை அறியாதிருக்கக்கடவது. அப்பொழுது அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா தாமே உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.* (மத்தேயு 6:1-4).

## *ஜெபம் மற்றும் உபவாசம் பற்றிய இயேசுவின் போதனை*

*அன்றியும் நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப்போலிருக்கவேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம்பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது அந்தரங்கத்தில்பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்.*

*அன்றியும் நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல வீண்வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்; அவர்கள், அதிக வசனிப்பினால் தங்கள் ஜெபம் கேட்கப்படுமென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். நீங்கள் ஜெபம்பண்ணவேண்டியவிதமாவது:*

*பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று*

Free Digital Copy From ServeNow

*எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே.*

*மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.*

*நீங்கள் உபவாசிக்கும்போது, மாயக்காரரைப்போல முகவாடலாய் இராதேயுங்கள்; அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும்பொருட்டாக, தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ உபவாசிக்கும்போது, இந்த உபவாசம் மனுஷர்களுக்குக் காணப்படாமல், அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கே காணப்படும்படியாக, உன் தலைக்கு எண்ணெய் பூசி, உன் முகத்தைக் கழுவு. அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.* (மத்தேயு 6:5-18).

## *பணம் மற்றும் உடைமைகளைப் பற்றிய இயேசுவின் போதனை*

*பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.*

*கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டதாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்; இப்படி உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், அவ்விருள் எவ்வளவு அதிகமாயிருக்கும்!*

*இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்றவனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு, மற்றவனை அசட்டைபண்ணுவான்; தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.*

*ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும்; என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதிருங்கள் என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன்;*

Free Digital Copy From ServeNow



*ஆகாரத்தைப்பார்க்கிலும் ஜீவனும், உடையைப்பார்க்கிலும் சரீரமும் விசேஷித்தவைகள் அல்லவா? ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள்; அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்; அவைகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? கவலைப்படுகிறதினாலே உங்களில் எவன் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்?*

*உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன? காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப்பாருங்கள்; அவைகள் உழைக்கிறதுமில்லை, நூற்கிறதுமில்லை; என்றாலும், சாலொமோன் முதலாய் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப்போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை என்று, உங்களுக்குச் சொல்லுகிறேன். அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா?*

*ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.*

*ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும்; அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும்.* (மத்தேயு 6:19-34).

## *நியாயத்தீர்ப்பதைப் பற்றிய இயேசுவின் போதனை*

*நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்.*

*நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்.*

Free Digital Copy From ServeNow



*பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துக்களைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்.* (மத்தேயு 7:1-6).

## *வல்லமையுள்ள ஜெபத்தைப் பற்றிய இயேசுவின் போதனை*

*கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்; ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.*

*உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?* (மத்தேயு 7:7-11).

## *பொன்னான விதியைப் பற்றிய இயேசுவின் போதனை*

*ஆதலால், மனுஷர் உங்களுக்கு எவைகளைச்செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிராணமும் தீர்க்கதரிசனங்களுமாம்.* (மத்தேயு 7:12).

## *இடுக்கமான வாசல் வழியாக உட்பிரவேசித்தல் பற்றிய இயேசுவின் போதனை*

*இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப்போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப்போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்.* (மத்தேயு 7:13-14).

## *மரத்தையும் அதன் கனிகளையும் பற்றிய இயேசுவின் போதனை*

*கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள். அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப்பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் பறிக்கிறார்களா? அப்படியே*

Free Digital Copy From ServeNow

*நல்லமரமெல்லாம் நல்லகனிகளைக் கொடுக்கும்; கெட்டமரமோ கெட்டகனிகளைக் கொடுக்கும். நல்லமரம் கெட்டகனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்டமரம் நல்லகனிகளைக் கொடுக்கமாட்டாது. நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும். ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.* (மத்தேயு 7:15-20).

## *உண்மையான சீஷத்துவம் பற்றிய இயேசுவின் போதனை*

*பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படிசெய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்."* (மத்தேயு 7:21-23).

## *கற்பாறையின் மீது வீட்டைக் கட்டியெழுப்புவதைப் பற்றிய இயேசுவின் போதனை*

*ஆகையால், நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக் கேட்டு, இவைகளின்படி செய்கிறவன் எவனோ, அவனைக் கன்மலையின்மேல் தன் வீட்டைக் கட்டின புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பிடுவேன். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதியும், அது விழவில்லை; ஏனென்றால், அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. நான் சொல்லிய இந்த வார்த்தைகளைக்கேட்டு, இவைகளின்படி செய்யாதிருக்கிறவன் எவனோ, அவன் தன் வீட்டை மணலின்மேல் கட்டின புத்தியில்லாத மனுஷனுக்கு ஒப்பிடப்படுவான். பெருமழை சொரிந்து, பெருவெள்ளம் வந்து, காற்று அடித்து, அந்த வீட்டின்மேல் மோதினபோது அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்.* (மத்தேயு 7:24-27).

## *இயேசு அதிகாரமுள்ளவராய் போதித்தல்*

*இயேசு இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தபோது, அவர் வேதபாரகரைப்போல் போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியால், ஜனங்கள் அவருடைய போதகத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள்.* (மத்தேயு 7:28-29).

Free Digital Copy From ServeNow

## *நீங்கள் ஒரு கிறிஸ்தவராக மாறிய பின் என்ன நடக்கும்?*

*ஒருவர் கிறிஸ்துவுடன் ஐக்கியப்பட்டு ஒரு கிறிஸ்தவராக மாறினால், அது ஒரு திருமண பந்தத்திற்குள் நுழைவதைப் போன்றது. ஆனால் நீங்கள் இயேசுவுக்குச் சொந்தமானவர்கள் என்பதை எப்படி உறுதியாகச் சொல்ல முடியும்? நீங்கள் ஒரு கிறிஸ்தவர் என்பதையும், நீங்கள் அவரிடம் கேட்டபடியே அவருடைய ஆவியானவர் உங்கள் வாழ்க்கையில் வந்திருக்கிறார் என்பதையும் நீங்கள் எப்படி அறிந்துகொள்வீர்கள்?*

## *சந்தேகம் எனும் பிரச்சனை*

*சந்தேகம் உங்களை முடமாக்கிவிடும். ஒரு கிறிஸ்தவராக உங்கள் ஆரம்ப நாட்களில் அவிசுவாசம் இருப்பது இயல்பானதுதான். சில சமயங்களில் அந்த உள்ளான மனதின் குரல் உங்களிடம், "ஓ, நீ ஒரு கிறிஸ்தவனா?" என்று சொல்லி ஏளனம் செய்யும் அல்லது "ஆண்டவர் உன்னை ஏற்றுக்கொள்வார் என்று நீ நினைக்கிறாயா?" உண்மையில் அது எப்படி உனக்கு உறுதியாகத் தெரியும்?*

## *கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்கள்*

*உங்கள் வாழ்க்கையை அவரிடம் ஒப்படைக்கும்போது உங்களது வாழ்வில் என்ன நடக்கும் என்ற வாக்குத்தத்தங்களால் வேதாகமம் நிரம்பியுள்ளது. பிதாவானவர் எனக்குக் கொடுக்கிறயாவும் என்னிடத்தில் வரும்; என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. (யோவான் 6:37). வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.* (மத்தேயு 11:28).

*இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்.* (வெளிப்படுத்தல் 3:20). அவர் ஒருவேளை நான் செய்வேன் என்று சொல்லவில்லை ... நான் செய்வேன் என்று அவர் உறுதியாகக் கூறுகிறார். இதுதான் ஒரு வாக்குத்தத்தம். இயேசு வாக்குப்பண்ணினார்,

*என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு வாக்குப்பண்ணினார்.* (யோவான் 5:24).

Free Digital Copy, From ServeNow

1 யோவான் 5:11-13 வரையுள்ள வசனங்களில் நாம் வாசிக்கிறோம், *அவன் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: என்னைச் சொஸ்தமாக்கினவர், உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று எனக்குச் சொன்னார் என்றான். அதற்கு அவர்கள்: உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று உன்னுடனே சொன்ன மனுஷன் யார் என்று அவனிடத்தில் கேட்டார்கள். சொஸ்தமாக்கப்பட்டவன் அவர் இன்னாரென்று அறியவில்லை; அவ்விடத்தில் ஜனங்கள் கூட்டமாயிருந்தபடியினால் இயேசு விலகியிருந்தார்.*

## *கிறிஸ்தவ வாழ்க்கை மிகவும் எளிதானதா?*

இயேசு நமக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பதற்காக மட்டுமல்ல, இங்கேயே இப்போதே பரிபூரண ஜீவனைக் கொடுக்கும்படியாக பூமிக்கு வந்தார். கிறிஸ்தவ வாழ்க்கை எப்போதும் எளிதானது என்று அர்த்தமல்ல. இயேசு நம்மிடம் இவ்வாறு கூறியிருக்கிறார்: *என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன்.* (யோவான் 16:33).

ஆரம்பகால திருச்சபை நாட்களில், கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்திற்காக அடிக்கடி துன்புறுத்தப்பட்டனர், ஆனால் அவர்கள் விடாமுயற்சியுடன் இருந்தனர். முன்பை விட இன்று கிறிஸ்தவர்களின் துன்புறுத்தல்கள் அதிகமாகவே இருக்கின்றன. ஒரு கிறிஸ்தவராக இருப்பது என்பது எளிதானது அல்ல, ஆனாலும் அது சாத்தியமானதுதான் மற்றும் தகுதியானது.

## *வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு உதவுங்கள்*

ஒரு கிறிஸ்தவராக வாழ்வது என்பது மனிதனால் உருவாக்கப்பட்ட விதிகளோ, பாரம்பரியமோ அல்லது கட்டுப்பாடுகளின் கடுமையான தொகுப்பைப் பின்பற்றுவதையோ அடிப்படையாகக் கொண்டது அல்ல. மாறாக, நம் வாழ்க்கையை மாற்றிய இயேசுவுக்கு அர்ப்பணிப்புடன் நமது கிறிஸ்தவ வாழ்க்கையை நாம் வாழ்கிறோம். இயேசு தம்மைப் பின்பற்றியவர்களைப் பார்த்து, *"என் கற்பனைகளைப் பெற்றுக்கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான், என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன் என் பிதாவுக்கு அன்பாயிருப்பான்; நானும் அவனில் அன்பாயிருந்து, அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்"* என்று சொன்னார். (யோவான் 14:21).

தேவனுடைய வார்த்தையை வாசித்துப் படிக்கவும். விசுவாசிகளாகிய நமக்குக் தேவன் அளித்த வாக்குத்தத்தங்கள் அனைத்தையும் கவனியுங்கள். அவருடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் நம் ஆத்துமாவுக்கு போஜனமாக இருக்கின்றன. *"சகல துர்க்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும்*

Free Digital Copy From ServeNow



*ஒழித்துவிட்டு,"* (1 பேதுரு 2:2). நீங்கள் நடக்க வேண்டிய பாதைக்கு அது வெளிச்சம். *"உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது."* (சங்கீதம் 119:105).

- கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் பரலோகத் தகப்பனிடம் தினமும் ஜெபியுங்கள். *"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரித்து"* (எபேசியர் 5:20).

- அவருடைய ஆசீர்வாதங்களுக்காக அவரைத் துதித்து, உங்கள் வாழ்க்கையில் பாவம் மற்றும் பலவீனத்தை மேற்கொள்வதற்கான பெலனைக் கேளுங்கள். *"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்."* (1 யோவான் 1:9). மற்றவர்களின் தேவைகளுக்காகவும் ஜெபியுங்கள். ஒவ்வொரு நாளும் நீங்கள் ஜெபிக்கும்போது உங்கள் ஆவிக்குரிய பலம் அதிகரிக்கும் மற்றும் வளர்ச்சியடையும்.

- இயேசு உங்கள் தனிப்பட்ட இரட்சகர் என்றும் நண்பர் என்றும் மற்றவர்கள் முன்பு அறிக்கையிடுங்கள். (ரோமர் 10:9-10). உங்களைச் சுற்றியுள்ள தேவனை இழந்த உலக ஜனங்களுக்கு நீங்கள் கிறிஸ்துவின் ஸ்தானாதிபதியாக மாறுவீர்கள் (2 கொரிந்தியர் 5:17-21).

- என்ன விலைக்கிரயம் செலுத்தியாகிலும், சோதனைகளைத் தவிர்க்கவும். சோதனைகள் எப்போதும் வரும், ஆனால் நாம் அவர்களின் பாதையில் நடக்காமல் இருக்கும்படி, நாம் கவனமாக இருக்க வேண்டும். நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இடையூறாக இருக்கும் அல்லது நம்மை இடறலடையச் செய்யும் எல்லா விஷயங்களையும் நாம் தவிர்த்துவிட வேண்டும். *"பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலகுங்கள்."* (1 தெசலோனிக்கேயர் 5:22).

- *மகிழ்ச்சியுடன் கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள். மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆனந்தசத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்.* (சங்கீதம் 100:2). நீங்கள் ஊழியம் செய்ய ஆண்டவர் ஒரு இடம் வைத்துள்ளார்.

- உங்கள் மனதைப் புதுப்பித்து மறுரூபமாகுங்கள். *"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்."* (ரோமர் 12:2).

Free Digital Copy From ServeNow

- இயேசுவைப் பின்பற்றும் மற்ற மக்களுடனும் தொடர்புவைத்துக்கொள்ளுங்கள். விசுவாசிகளின் ஐக்கியத்தில் சேரவும். அவர்களுடன் சேர்ந்து ஆராதனை செய்யுங்கள், அவர்களுடன் இணைந்து ஜெபம் செய்யுங்கள், தலைவர்கள் உங்களுக்கு ஊழியம் செய்யட்டும். உங்கள் நேரத்தையும் திறமையையும் பணத்தையும் நித்தியத்திற்காக முதலீடு செய்யுங்கள்.

- மேலான காரியங்களை நாடவும். கொலோசெயர் 3:1-3 *"நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது"* (கொலோசெயர் 3: 1-3)

- கிறிஸ்துவின் அன்பு உங்கள் வாழ்வை நிரப்பட்டும். *ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக.* (பிலிப்பியர் 2:3-4).

- *அன்பே பிரதானமானது. நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம்போலவும், ஓசையிடுகிற கைத்தாளம்போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப் பேர்க்கத்தக்கதாக சகல விசுவாசமுள்ளவனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை.*

  *அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது. அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். (1 கொரிந்தியர் 13:1-7).*

Free Digital Copy From ServeNow

***உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார்.*** **(மாற்கு 12:30-31).**

**பாடத்தை கற்றுக்கொள்ளவும் பிரதிபலிக்கவும் சில கேள்விகள்**

1. கிறிஸ்தவர் யார் என்பதைப் பற்றி பல கருத்துகள் உள்ளன. நீங்கள் எதை நம்புகின்றீர்கள்?
2. கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எது அடிப்படையான அடித்தளமாக உள்ளது?
3. ஒரு கிறிஸ்தவரின் சில பண்புகள் யாவை?
4. இதில் நீங்கள் எவற்றில் முன்னேற வேண்டிய தேவை உள்ளது?
5. நீங்கள் இதை எவ்வாறு சாதித்துக் கொண்டு இருக்கிறீர்கள்?
6. கிறிஸ்தவர் இந்த உலகத்தில் உள்ளவர் ஆனால் இந்த உலகத்திற்கானவர் அல்ல என்பது உண்மையாக என்ன பொருள் தருகிறது?
7. இயேசு பல காரியங்களை நமக்குக் கற்றுத் தருகிறார். இவைகளில் சிலவற்றைக் குறிப்பிட்டு அவை ஏன் உங்களுக்கு முக்கியமானவை எனக் கூற முடியுமா?
8. நாம் அனைவரும் எவ்வாறு கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முடியும்?

௯. உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையை நீங்கள் துடிப்பாக வைத்துக் கொள்ள இரண்டு அல்லது மூன்று வழிகளைப் பெயரிடுக.